# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.370/ந/2025, நாள் 07.07.2026

S.அன்பழகன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. கட்டிட உரிமையாளர்,
மஹாதேவ் மொபைல்ஸ்,
67 F/A5, தியாகி சிங்காரவேலர் தெரு,
பழைய நகராட்சி அலுவலகம் எதிரில்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 01.11.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.11.2025 அன்று பெறப்பட்டு, 370/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரின் 01.11.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்கள் தெரிவித்துள்ளார்:

"துறையூர், தியாகி சிங்கார வேலர் தெரு 67F/A5ல் பழைய நகராட்சி அலுவலகம் எதிரில் மஹாதேவ் மொபைல்ஸ் மற்றும் TAF IAS ACADEMY அமைந்துள்ள கட்டிடம் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து கட்டிபுள்ளதோடு, பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட இடம் காலி இடம் விடாமல் 3 மாடி கட்டப்பட்டுள்ளது. எனவே, விதிமீறிய மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 13.09.2025ல் புகார் அனுப்பி அதனை அவர் 15.09.2025ல் பெற்று

கொண்டதாக எனக்கு ஒப்புதல் அட்டை வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் நகராட்சி இயக்குனர்/மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே TNCDBR 2019ன் படி கட்டிட வரைபடத்தில் (BLUE Print) Parking and Setback Area குறிப்பிடப்பட்டுதான் அனுமதி நகராட்சியால் வழங்க முடியும் என்று சட்டம் இருப்பதோடு கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் set back கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் மஹாதேவ் மொபைல்ஸ் அமைந்துள்ள வணிக பயன்பாட்டு கட்டிடம் பார்க்கிங், செட்பேக் வசதியின்றி அதுவும் மெயின் வாசல் அரசு கழிவு நீர் கால்வாயில் வைத்து விதிமீறி கட்டப்பட்டுள்ளது எனக்கு அதிர்ச்சி அளிப்பதாக கூறியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காத காரணத்தால்தான் நகராட்சி அலுவலகம் அருகிலேயே இதுபோல் விதிமீறல் கட்டிங்கள் 10 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருவது நன்கு விளங்குகின்றது என்றும், ஆணையர்கள் உரிய கால இடைவெளியில் இந்த கட்டிடத்தை ஆய்வு செய்திருந்தால் விதிமீறல்களை தடுத்திருக்கலாம் என்றும், கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் இந்த கட்டிடத்தை இதுவரை ஆய்வு செய்யாமல் இருப்பதிலிருந்து அனைத்து ஆணையர்களும் லஞ்சம் பெற்றுள்ளார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்று உறுதியாக நிருபணமாகின்றது என்று கூறி இருந்தேன்.

மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் பல்வேறு உத்தரவுகள் போட்டிருப்பது தெரிந்தும் துறையூர் நகர் முழுவதும் விதிமீறல் கட்டிங்கள் புற்றீசல் போல் காணப்படுவதிலிருந்து அனைத்து ஆணையர்களும் தங்களை உயர்நீதிமன்றத்தை விட சர்வ வல்லமை படைத்தவராக கருதி செயல்பட்டுள்ளார்கள் என்று கூறினால் அது மிகையல்ல என்று கருதுவதாக ஆணையருக்கு அளித்த புகாரிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதி இன்றி செயல்படும் கட்டிடங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து (உச்சநீதிமன்ற உத்தரவு எண்.12199-12200 நாள் 30.04.2025) ROC.3555/2025/TP3 நாள் 15.05.2025 கடிதம் மூலம் நகராட்சி இயக்குனர் அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பியும் ஆணையர் விதிமீறிய கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் மாண்புமிகு உச்சநீதி மன்றத்திற்கே சவால் விடும் விதமாக இதுவரை துறையூர் நகரில் விதிமீறிய கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக தெரியவருகிறது என்று குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே விதி மீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காததற்காக சென்னை மாநகராட்சி ஆணையர் மன்னிப்பு கோரிய வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் கட்டிடம் தொடர்பான நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றுவதில் எச்சரிக்கை மற்றும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளதை கவனத்தில் கொண்டு மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு எண். (12199-12200/2025 நாள் 30.04.2025 இல் பிறப்பித்துள்ள உத்தரவின் அடிப்படையில் விதிமீறி கட்டிஉள்ள மஹாதேவ் மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கேட்டு இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மஹாதேவ் மொபைல்ஸ் மற்றும் TAF IAS ACADEMY அமைந்துள்ள கட்டிடத்தை நேரடியாக களவு ஆய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR 2019ன்படி செட்பேக்விடப்பட்டுள்ளதா என்பதையும், கட்டிடத்தின் முன்புறம் 5

மீட்டர் செட்பேக் விடப்பட்டுள்ளதா என்பதையும், கட்டிட வரைபடத்தில் பார்க்கிங் குறிப்பிடப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும், 3 மாடி கட்டியுள்ளதற்கு அனுமதி அளிக்கப்பட்டதா என்பதையும், கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று நகராட்சி வழங்கி உள்ளதா என்பதையும், ஆய்வு செய்து கட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளது தெரியவந்தால் உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் அந்த கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கேட்டிருந்தேன். மேலும் தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் உயர்நீதிமன்றம் உள்ளாட்சி முறைமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதாக கூறி இருந்தேன். எனவே நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்ற உயர் நீதிமன்ற உத்தரவுகளை சுட்டிகாட்டியதோடு தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் எனக்கு பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர் நீதிமன்றம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியும் இதுவரை விதிமீறிய மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்டுபடுகின்றார் என்பது நன்கு விளங்குகின்றது.

எனவே, விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தை என்று நான் கருதுவதால் அவர் குற்றத்தை அவரே விசாரிப்பது இயற்கை நீதிப்படி சரியாக இருக்காது என்று நான் கருதுவதோடு ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம் அறிக்கை அனைத்தும் மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாக கொடுப்பதோடு எப்படியும் எப்பாடுபட்டாவது மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிட உரிமையாளரை காப்பாற்றிவிடுவேன்.

எனவே, ஏழைகளுக்கு சிறந்த நீதி வழங்குவதில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் எப்படி செயல்படுகின்றதோ, அதற்கு சற்றும் சளைத்தவர் அல்ல என்று நிரூபிக்கும் வகையில் நேர்மையோடு நீதி வழங்கும் தாங்கள் மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிடத்தை இடநேராய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR 2019ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தும், 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடம் கட்டப்பட்டிருந்தால் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்து கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து விதிமீறி செயல்படும் மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பணிவுடன் கீழ்படிந்து தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது மனு குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 10.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் (மஹாதேவ் மொபைல்ஸ்) ஆகியோரை 12.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. நிர்வாக காரணங்களினால் மேற்படி விசாரணை 19.05.2026 அன்று ஒத்திவைக்கப்பட்டு, அன்றைய நாளில் நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 21.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் மனுதாரர், எதிர்மனுதாரர் மற்று. 2–ம் எதிர்மனுதாரருக்கும் அனுப்பப்பட்டன.

5. துறையூர் நகராட்சி ஆணையர் தனது ந.க.எண்.4320/2025/எப்1, நாள் 27.04.2025ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மஹாதேவ் வணிக வளாகம் சுமார் 7 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. அதில் தரைத்தளத்தில் 1152 சதுரடி பரப்பளவு கொண்ட RCC கட்டிடம் மஹாதேவ் மொபைல்ஸ் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் தலா 1152 சதுரடி பரப்பளவில் TAF IAS அகாடமி பயிற்சி மையம் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. கட்டுமானத்தின் மொத்தப்பரப்பளவு 4608 சதுரடியாகும். தரைத்தளம், முதல் தளத்திற்கு தலா 880 (மொத்தம் 1760 ) சதுரடிக்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால் தலா 1152 சதுரடியில் தரைத்தளம் முதல், மூன்றாம் தளம் வரை அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம், பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

வரிவிதிப்பு எண்கள்.087/021/901530, 087/021/901531, 087/021/901532 மற்றும் 087/021/901533 ஆகிய நான்கு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133,135 (1)ன்கீழ் கட்டிட உரிமைாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. மனுதாரர் தனது 14.05.2026 நாளிட்ட கடிதத்தில் தங்களுக்கு வீடு மாறுதலாகி சென்றபோது வாகனத்தில் இருந்து கீழே விழுந்து கால் எலும்பு முறிவு ஏற்பட்டதால் 19.05.2025ல் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதால் மேற்படி விசாரணைக்கு ஆஜராக இயலாது" எனத்தெரிவித்து 14.05.2026 நாளிட்ட அறிக்கையினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மனுதாரரின் 14.05.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"திருச்சி மாவட்டம், துறையூர் தியாகி சிங்கார வேலர் தெரு, 67F/A5ல் பழைய நகராட்சி அலுவலகம் எதிரில் மஹாதேவ் மொபைல்ஸ் மற்றும் TAF IAS ACADEMY அமைந்துள்ள கட்டிடம் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பெக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் 3 மாடி TNCDBR 2019 சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் நான் புகார் கொடுத்தற்கு பின்பு தான் பார்க்கிங் இடம் வாங்கியதாக அனைத்து கட்டிட நீர்வாகிகளும் இந்த முறை மன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிட நிர்வாகிகளுக்கு சாதகமாக பார்க்கிங் இடம் புதிதாக வாங்கியுள்ளதாக அனைத்து ஆணையர்களும் பொய்யாக கூறி வருவதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் வரைபடத்தில் இல்லாமல் புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியில் பதிவு செய்து ரசீது வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் தாக்கல் செய்யச் சொல்லி அதனை தாங்கள் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைதளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று விதிமுறை இருப்பதால் மஹாதேவ் மொபைல்ஸ் உள்ள கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படி தான் கட்டப்பட்டுள்ளதா என்பதை உத்தரவில் தெரிவிக்கவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பொரும்பாலான வழக்குகளில் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர்கள் தொடர்ந்து கூறி வருவதால் சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMNO.4315/2026 வழக்கில் சென்னை நகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்து விட்டது என்று கூறியதற்கு இது போதுமான காரணமில்லை என்றும் அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்று முறை என்று சொல்லி தப்பிக்க முடியாது என்றும் இது எதிர் தரப்புடன் சேர்த்து கூட்டுசதியாக இருக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பல தீர்ப்புகளின் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை விஜிலன்ஸ் துறை விசாரித்து உண்மையை கண்டறிய வேண்டும் என்று 20.02.2026ல் உத்தரவு போட்டுள்ளது. மேலும் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குனருக்கு ரூ.50 லட்சம் உயர் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. எனவே இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200 நாள் 30.04.2025 வழக்கின் உத்தரவில் விதிமீறி கட்டியுள்ள கட்டிடத்தை முறை படுத்த கூடாது என்றும் விதிமீறிய கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி என்றும் இதற்கு வேறுவழி இல்லை என்று கூறியுள்ள நிலையில் மாண்புமிகு தங்கள் முன்பு நடைபெற்ற வழக்குகளில் பெரும்பாலான கட்டிட உரிமையாளர்கள் அனுமதியற்ற கட்டிடத்தை முறைபடுத்த 80Aன் கீழ் மேல் முறையீடு செய்துள்ளதாக கூறி வருவதை தாங்கள் சட்டப்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை உத்தரவில் விளக்கவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி முறைமன்றத்தில் நடந்த முறையீட்டு மனுக்கள் 102/ந/2025, 104/ந/2025 ஆகிய வழக்கு விசாரணையின் போது தங்கள் முன்பு 10.06.2025ல் நேரடியாக ஆஜராகி சத்திய பிரமாணம் செய்து அளித்த வாக்கு மூலத்தில் துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் அம்பிகா அவர்கள் மேற்கண்ட 102/ந/2025 ராஜா சில்க்ஸ் 104/3/2025 ஸ்ரீ குமரன் டெக்ஸ் ஆவணம் நகராட்சியில் இல்லை என்று தெரிவித்து விட்டு ந.க.எண்.2654/2025/சி2, நாள் 01.08.2025 கடிதம் மூலம் எனக்கு ஆவணத்தை பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் அனுப்பியுள்ளார்.

எனவே, மதிப்புமிக்க தங்கள் முன்பாக சத்திய பிரமாணம் செய்து ஆவணம் இல்லை என்று தைரியமாக வாக்கு மூலம் அளித்த நிலையில் எனக்கு ஆவணம் பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் அனுப்பிய துறையூர் நகராட்சியின் செயல் விதிமீறிய அனைத்து கட்டிட உரிமையாளர்களுடன் கை கோர்த்து கொண்டு சட்டத்தை மீறி செயல்படுவதை வழக்கமாகவும், வாடிக்கையாகவும் கொண்டு செயல்படுவதையே காட்டுகின்றது.

எனவே, மதிப்புமிக்க மரியதைக்குரிய மேலான தாங்கள் துறையூர் நகராட்சியின் ஊழலை தடுக்கும் பொருட்டு துறையூரில் உள்ள மஹாதேவ் மொபைல்ஸ் உள்ள கட்டிடத்தை நேரில் இட நேராய்வு செய்து அந்த கட்டிடம் கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து விதிமீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவு எண்.12199–12200 நாள் 30.04.2025ன் படி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என்மீது எடுக்கும் சட்ட நடவடிக்கையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவுடன் தாழ்மையுடன் கீழ்படிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

7) எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.4320/எப்1/2025, நாள் 18.05.2026ல், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் – 2026 (SIR) பணியின் காரணத்தினால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற

நடுவத்தில் 19.05.2026 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் திருமதி. த. தவமணி கலந்து கொள்ள அனுமதிக்க கேட்டுக்கொண்டதை தொடர்ந்து நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்ட வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள மஹாதேவ் வணிக வளாக கட்டிடத்தின் தரைத்தளம் 1152 சதுர அடி கொண்ட RCC கட்டிடமாகும். இக்கட்டிடத்தில் சுமார் 7 ஆண்டுகளுக்கு மேலாக மஹாதேவ் மொபைல்ஸ் இயங்கி வருகிறது. முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் தலா 1152 சதுரடி பரப்பளவில் TAF IAS அகடாமி பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இக்கட்டிட கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 4608 சதுரடியாக உள்ளது. இக்கட்டிடத்திற்கான சொத்துவரி நான்கு வரிவிதிப்புகளில் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்கான குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை. இக்கட்டிடம் தரைத்தளம், முதல் தளம் தலா 880 சதுரடி வீதம் மொத்தம் 1760 சதுரடிக்கு நகராட்சியின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் கூடுதலாக 272 சதுரடிவீதமும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் தலா 1152 சதுரடி வீதமும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம், பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யப்படாததும் வாகனம் நிறுத்துவதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், Tamil Nadu Town and Country Planning Act, 1971 பிரிவு 80A ன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக விசாரணையின்போது மஹாதேவ் மொபைல்ஸ் உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது. இதனை சரிபார்த்து உரிய அறிக்கையினை 1 வார காலத்திற்குள் இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை பணிவுடன் தொவித்துக்கொள்கிறேன்."என தெரிவித்துள்ளார்.

8. 2–ம் எதிர்மனுதாரரான மஹாதேவ் மொபைல்ஸ் உரிமையாளர் திரு. வே. இளங்கோவன் என்பவர் 19.05.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள எங்களது மஹாதேவ் மொபைல்ஸ் இயங்கி வரும் கட்டிடம், முறையாக அனுமதி பெற்று கட்டப்பட்டு இயங்கி வருகிறது. நகராட்சிக்கு செலுத்தவேண்டிய அனைத்து வரிகளும் நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது.

எங்களது கட்டிடத்தில் விதிமீறல்கள் எதுமில்லை. அவ்வாறு விதிமீறல்கள் ஏதேனும் இருக்கும்பட்சத்தில் நாங்கள் அதனை அரசு விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்கிறோம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாங்கள் எங்களது கட்டிடத்தை வரன் முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971 பிரிவு 80-A ன் கீழ் அரசுக்கு மேல் முறையீடு செய்து அரசிடமிருந்தும், துறையூர் நகராட்சி ஆணையரிடமிருந்தும், பெறப்பட்ட ஒப்புகையின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். மேற்கண்ட விவரங்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம், 2–ம் எதிர்மனுதாரரான மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம் மற்றும்

தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

துறையூர், தியாகி சிங்காரவேலர் தெரு, 67F/A5ல் பழைய நகராட்சி அலுவலகம் எதிரில் மஹாதேவ் மொபைல்ஸ் மற்றும் TAF IAS ACADEMY அமைந்துள்ள கட்டிடம், அரசு கழிவுநீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து கட்டியுள்ளதோடு, பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட காலி இடம் விடாமல் 3 மாடி கட்டப்பட்டுள்ளது என்பதும், விதிமீறிய மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி துறையூர் நகராட்சி ஆணையருக்கு 13.09.2025ல் மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டுள்ளதும், இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் துறையூர் நகராட்சியால் எடுக்கப்படாததால், மனுதாரர் மேற்படி கட்டிடத்தை நேராய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR, 2019–ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து விதிமீறி செயல்படும் மஹாதேவ் மொபைல்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு உத்தவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் கோரியுள்ளது மனுதாரரின் புகார் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மஹாதேவ் வணிக வளாகம் கட்டிடம் ஜமார் 7 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதும், அதில் தரைத்தளத்தில் 1152 சதுர அடி பரப்பளவு கொண்ட RCC கட்டிடம் மஹாதேவ் மொபைல்ஸ் இயங்கி வருவதும், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் தலா 1152 சதுர அடி பரப்பளவில் TAF IAS அகாடமி பயிற்சி மையம் இயங்கி வருவதும், கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 4608 சதுர அடி என்பதும், தரைத்தளம், முதல் தளத்திற்கு தலா 880 (மொத்தம் 1760) சதுர அடிக்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளதும், முன்பக்கம், பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதும், வாகனம் நிறுத்துவற்கு இடம் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதும், தரைத்தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் கூடுதலாக 272 சதுர அடி வீதமும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் தலா 1152 சதுர அடி வீதமும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும், மேலும் Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதாக விசாரணையின்போது மஹாதேவ் மொபைல்ஸ் உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், அதனை சரிபார்த்து உரிய அறிக்கையினை 1 வார காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of the individuals. xxx xxx xxx".

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–அன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதாகவும், அதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது குறித்து அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 07–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S.அன்பழகன்,
த/பெ ப. திரு.சீனிவாசன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின்ரோடு,
துறையூர் (அஞ்சல் & வட்டம்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 010.

2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) கட்டிட உரிமையாளர்,
மஹாதேவ் மொபைல்ஸ்,
எண்.67F/A5, தியாகி சிங்காரவேலர் தெரு,
பழைய நகராட்சி அலுவலகம் எதிரில்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.